மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஆடுதுறை 27, சி. ஓ. 29. இரண்டும் பயிரிடப்பட்டு பயன் தருகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : அங்கே விதைப்பண்ணையிலே 4,000, 5,000 ரூபாய் பெருமானமுள்ள பெரிய பெரிய மாடுகளை வைத்து உழுகிறார்கள். சேறு இருக்கிற காரணத்தினால் மாடுகள் காலைப் பிடுங்க முடியாமல் சேரில் கஷ்டப்படுகின்றன. ஆகவே, நடுத்தரமான மாடுகளை வைத்து உழுவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : முதலில் நான் அதை இன்னும் பார்க்கவில்லை. ஆகஸ்ட் மாதத்தில் அந்தக் கல்லூரியை நான் நேரடியாகப் பார்க்கயிருக்கிறேன். அந்த நேரத்திலே யோசனை செய்யலாம் என்று நினைக்கிறேன். கனம் அங்கத்தினருடைய கருத்து கவனிக்கப்படும்.

திரு. எஸ். முத்துலிங்கம் : விவசாயக் கல்லூரியில் மாணவர்கள் சேருவதாக இருந்தால் என்னென்ன தகுதி தேவைப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்தக் கேள்வி விவசாயம் பற்றியது. தனிக்கேள்வி கேட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, நெல் பயிரிடப்பட்டது என்று சொன்னார்கள். நெல் மட்டும் பயிரிடப்பட்டதா ? அல்லது மற்ற தான்யங்களும் பயிரிடப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நெல்லைப்பற்றிய கேள்விதான் இது.

கண்காணிப்பு இல்லங்கள்

* 111 வினா—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குறிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1966-ஆம் ஆண்டில் எத்தனை பெண்கள் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லங்களுக்கு அனுப்பப்பட்டனர் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1,230 பெண்கள் சேர்க்கப்பட்டனர்.

திரு. கரு. சீமைச்சாமி : ஒழுக்க கண்காணிப்பு நிலையங்களிலிருந்து பெண்கள் வெளிவருகிறபோது திருமணம் ஆகாத பெண்களுக்கு திருமணம் செய்து வைத்து வாழ்க்கை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை ' எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கண்காப்ணிபு இல்லங்களிலிருந்து செல்லுவதற்கு முன்னரேகூட திருமணம் செய்துவைக்கவேண்டுமென்று அவர்கள் விரும்பினால் அரசாங்கமே அதற்கு ஏற்பாடு செய்து மணமகனுடைய வரலாற்றை அறிந்த பின்னாலே அனுமதி கொடுக்கிறது.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, கண்காணிப்பு இல்லங்களுக்கு மனுக்கள் ஏராளமாக வருகின்றன. இதை மேலும் விரிவுபடுத்தும் திட்டம் அரசினருக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மனுக்கள் குறைந்து நல்லதொரு சமுதாயத்தை அமைக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.

THIRU K. VINAYAKAM ; Having sent these fallen girls to the vigilance homes, what steps are taken by the Government to have them rectified and to make them behave properly and acquit themselves as citizens of India ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தப் பள்ளிகளிலே அவர்களுக்குக் கல்விப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. தொழில் பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. அவர்களெல்லாம் பிற்காலத்தில் அவர்கள் வாழ்க்கையின் பயன் அடைய அப்படிப்பட்ட பயிற்சிகளெல்லாம் கொடுக்கப்படுகிறது. அதற்குப் பின்னாலும் அவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்று அது போன்ற அமைப்புகளும் நம் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: ஸார், இந்தப் பள்ளிகளிலே உள்ள குழந்தைகளில், சில குழந்தைகள் நல்ல வசதியுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள்; மற்றவர்கள் ஏழைகளாக இருப்பார்கள். ஏழைகளாக இருக்கிறவர்களுக்குக் கல்யாண வயது ஆனவுடன் கல்யாணம் செய்து வைத்து அவர்களுக்கு ஸ்ரீதனம் கொடுக்க அதற்கு ஒரு தொகையை ஒதுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திருமணம் செய்ய அரசாங்கம் உதவி செய்து ஏற்பாடு செய்கிறது. ஸ்ரீதனம் கொடுக்க கனம் அங்கத்தினரைப் போன்ற பெருந்தனக்காரர்கள் முன் வந்தால் அது பயன்படுத்தப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, இதில் திருமணம் ஆனவர்கள் எத்தனை பேர்கள்? திருமணம் ஆகாதவர்கள் எத்தனை பேர்கள்? எந்த வயது முதல் எந்த வயது வரையில் உள்ளவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இத்தகைய இல்லங்களில் பல்வகைப்பட்ட இல்லங்கள் இருக்கின்றன. இதிலே, விஜிலன்ஸ் ஹோமில் சட்டத்தின் கீழ் தவறு செய்தவர்கள் வருகிறார்கள். ரெஸ்க்யூ ஹோமில் 21 வயதுக்கு உட்பட்டவர்கள் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டும், வேறு பல காரணங்களாலும் வருகிறவர்களுக்கு அங்கே இடம் கொடுக்கப்படுகிறது.

திரு. ந. தருமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்காக ஒழுக்கக் கண்காணிப்பு நிலையம் இருந்தும்கூட, சில நகரங்களில் ஒழுக்கத்தைக் கெடுப்பதற்கென்றே தொழில் முறையில் சில நிலையங்கள் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம் தமிழ்நாட்டை பொறுத்த வரையில் இது தொழிலாக நடப்பதில்லை என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, கண்காணிப்பு நிலையங்களில் எவ்வளவு பேர்களைச் சேர்த்துக்கொள்ள முடியும்? எந்த முறையில் சேர்த்துக்கொள்ளப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் முன்னரே சொன்னேன். இதிலே 2–3 வகைப்பட்ட இல்லங்கள் இருக்கின்றன. ரெஸ்க்யூ ஹோம் என்பது 21 வயதுக்குக் குறைந்தவர்கள் அதிலே நீதி மன்றங்கள் மூலமாக அனுப்பப்படுகிறார்கள். அல்லது வேறு பலர் சிபாரிசு செய்து இவர்கள் இது போன்ற பள்ளிகளில் வைக்கப்படவேண்டியவர்கள் என்றும் சொல்லப்படுகிறது. அனாதைகளாக இருக்கிறவர்களையும் அங்கே வைக்க இடம் இருக்கிறது. ஸப்ரஷன் ஆஃப் இம்மாரல் ட்ராஃபிக் ஆக்டின் கீழ் தவறு செய்து நீதி மன்றத்தினால் தண்டிக்கப்பட்டவர்கள், நீதி மன்றங்களாலேயே இந்த இல்லங்களுக்கு அனுப்பப்படுகின்றனர்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, எவ்வளவு பேர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 1966-ம் ஆண்டு இந்த இல்லங்களிலே சேர்க்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1,230.